வழங்கவேண்டுமென்று கேட்டு, அதுபோன்ற சாலைகளைப் பெற்று மாநில அரசால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய கிராமச் சாலைகள் வருகிற நேரத்திலே வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலையிலே வேகமாகச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. உள்ளேயிருந்து வரக்கூடியவர்கள் எதிர்பாராதவிதமாக விபத்திலே சிக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது என்பதற்காக அதையும் இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறோம். உள்ளிருந்து வரக்கூடிய சாலைக்கு சிறு வேகத் தடையும், எச்சரிக்கைப் பலகையும் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அதுபோன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநில அரசாலும் நிதிகள் ஒதுக்கப்பட்டு அதுபோன்ற விபத்துப் பகுதிகள் சரிசெய்யப்பட்டு வருகின்றன. மாநில நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய கிராமச் சாலைகளில்கூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து நிதி பெற்று இப்போது அதுபோன்ற மேம்பாடு செய்து வருகிறோம். எனவே, விபத்துகள் இப்பொழுது குறைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *17*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***117248—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2011 பிப்ரவரி 7]

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி தமிழகத்தின் கடைசி தொகுதியாகும். அதுமாத்திரமல்ல; தமிழகத்திலேயே அதிக பொறியியல் கல்லூரிகளும், அதிகம் பொறியியல் படித்த மாணவர்களும் இருக்கிற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமாகும். வேலையில்லாமல், படித்த பட்டதாரி மாணவர்களெல்லாம் இருப்பது இந்த மாவட்டத்தில்தான். தமிழகத்தில் மாத்திரமல்ல; ஆந்திரா, கர்நாடகா, டெல்லி போன்ற மாநிலங்களுக்கு வேலை தேடிச் செல்கின்ற சூழ்நிலை இருக்கிறது. குமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இரண்டு பக்கம் கடலும், இரண்டு பக்கம் மலையுமாக அமைந்த பகுதியாகும். இந்தப் பகுதியிலே மேற்கு தாமிரபரணி ஆறு குளித்தலை வழியாக ஓடுவதால் தண்ணீர்ப் பஞ்சம் இல்லாத நகரமாக இருக்கிறது. 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மார்த்தாண்டத்தில் இரயில் நிலையமும், 30 கிலோ மீட்டர் தொலைவில் திருவனந்தபுரத்தில் விமான நிலையமும் இருப்பதால் இங்கு போக்குவரத்திற்குக்கூட வசதியாக இருக்கிறது. ஆகவே, குமரி மாவட்ட மக்களின் மனதில் உள்ள எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க வேண்டுமென்றால், அரசு ஆய்வு செய்து, குறிப்பிட்ட இடத்தில் முதலீட்டாளர்கள் வருவார்களா எனக் கண்டறிந்த பிறகே, அரசு, நிலத்தைக் கையகப்படுத்தி, நிதி ஒதுக்கீடு செய்து பூங்காக்களை உருவாக்கி வருகிறது. அதன் அடிப்படையில் சுமார் 532 கோடி ரூபாய் செலவில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், ஓசூர் ஆகிய மாவட்டங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[2011 பிப்ரவரி 7

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பூங்காக்கள் அமைப்பதற்காக நிலத்தைக் கண்டறியும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அடுத்து உள்ள நெல்லை மாவட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. இதில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு, ரூபாய் 50 கோடி ஆகும். அதுமட்டுமில்லாமல், தற்போது 4 பன்னாட்டு நிறுவனங்கள் Sutherland நிறுவனம், Syntel International, Deccan Services, A & D Cosmic Powers என்ற இந்த 4 நிறுவனங்கள் முதலீடு செய்ய, ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. எனவே, அதன் அடிப்படையில் அடுத்த 2 ஆண்டுகளில் சுமார் 10 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்களும் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கிள்ளியூர் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா வரும்போது கன்னியாகுமரி மாவட்ட மாணவர்கள்கூட பயன் பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கண்டிப்பாக குமரி மாவட்டத்தையும் தனது அருங்கண்ணால் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS